தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993, ஏப்ரல் 8, வியாழக்கிழமை

பங்குனி, 26, ஆங்கீரச-திருவள்ளுவர் ஆண்டு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"துன்பம் உறவரினும் செய்க துணிவுஆற்றி
இன்பம் பயக்கும் வினை."

துன்பம் மிகுந்ததாகவே இருப்பினும், முடிவில் இன்பத்தைத் தரக்கூடிய வினையை, ஒருவர் தனக்குள்ள துணிவைப் பயன் படுத்திக்கொண்டு செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள் - விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்—வினா எண். 281. திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், கேட்கிறார் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

281—

அச்சகத் தொழிலாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள்

*11244— திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் தற்போதுள்ள அரசு அச்சகத் தொழிலாளர் களின் எண்ணிக்கைக்கேற்ப புதிய குடியிருப்புகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையிலுள்ள அரசு அச்சக பணியாளர்களுக்கு சென்னை யிலுள்ள தண்டையார்பேட்டை, காமரார்ஜர் நகரில் அரசு அச்சகக் குடியிருப்புக்காக ரூ. 18 இலட்சம் செலவில் 'ஏ', 'பி' மற்றும் 'சி' வகை குடியிருப்புகள் 300 கட்டப்பட்டு அவர்களுக்கு ஒதுக்கப் பட்டு வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி என்றால், 300 வீடுகள் கட்டி அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாக்கி பேர் வீடுகள் இல்லாமல் யாராவது இருக்கிறார்களா? அப்படி இருந்தால் அவர்களுக்கும் சேர்த்து வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 4,000 தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள். இது 1982ஆம் ஆண்டு அப்போது எந்த ஆட்சி என்று உங்களுக்குத் தெரியும். அந்த ஆட்சிக் காலத்தில் தான் முதன் முதலில் இதற்காக பணம் ஒதுக்கப்பட்டு கட்டப்பட்டு வருகிறது. படிப்படியாக எல்லோருக்கும் கட்டுவதற்கு அரசு முயற்சி செய்யும். ஆனால் இன்றைக்கு நிதிநிலைமை இந்திய துணைக் கண்டத்தில் மட்டுமல்ல பல்வேறு மாநிலங்களிலும் குறைந்தது 6, 7 ஆண்டு காலமாக பொதுவாக இந்திய பேரரசுக்கும் பல்வேறு மாநிலங்களுக்கும் கஷ்டங்கள் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். வி. சண்முகம்

திரு. எஸ். வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, கேள்வி நேரத்தில் நீங்கள் துணைக் கேள்வி தான் கேட்கலாம். வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசக் கூடாது என்று விதி இருக்கிறது. விதிகளுக்குப் புறம்பாகப் பேசக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு பிரச்சினையைப் பற்றிப் பேசக் கூடாது என்று விதி இருக்கிறது, கேள்வி நேரத்தில் துணைக் கேள்விதான் கேட்கலாம். ஆகவே, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண். 282, திரு. கே. செல்வராஜ், திரு. கா. பூ. முனுசாமி, திருமதி கே. மரியம் உல்ஆசியா, திரு. கே. செல்வராஜ் இருக்கையில் இல்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

282——

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.